தினமணி

## சிக்கன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டாமா?

அருண் நேரு

First Published : 12 May 2012 01:15:45 AM IST

2012 என்பது பல நாடுகளில் தேர்தல் ஆண்டாகும். சர்வதேச அளவில் பொருளாதாரம் மூலம் பிற நாடுகளுடன் இணைக்கப்பட்டிருப்பதால் பிற நாடுகளில் நடக்கும் தேர்தல்கள் கூட நமக்கு சுவாரசியமானவைதான்.

உலகையே ஓரளவுக்கு ஆட்டிப்படைக்கும் அமெரிக்க நாட்டின் அதிபர் தேர்தல் 2012 நவம்பரில் வருகிறது. ஐரோப்பிய நாடுகளில் கிரீஸ், பிரான்ஸ் தேர்தல் முடிவுகள் நமக்கு முக்கியமானவை. வேலையில்லாத் திண்டாட்டமும் விலைவாசி உயர்வும் வெளிநாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்கள் பிரச்னையும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

பிரிட்டனில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்களில் ஆளும் கன்சர்வேடிவ், லிபரல் கட்சிகளுக்குக் கணிசமாகத் தோல்வி ஏற்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டில் இப்போதைய அதிபர் நிகோலஸ் சர்கோஸி தோல்வியடைந்து சோஷலிஸ்ட் கட்சியின் ஃபிரான்ஷுவா ஹொலாந்த் வெற்றி பெற்றிருக்கிறார்.

ஹொலாந்த் சமீபகாலம் வரையில் தன்னுடைய அலுவலகத்துக்கு ஸ்கூட்டரில்தான் போயிருக்கிறார். வெளியூர்களுக்குப் போவதாக இருந்தால் ரயிலில்தான் செல்வாராம், விமானத்தில் செல்ல மாட்டாராம். வெகு சாமான்யமானவர் என்று வாக்காளர்கள் அவரைக் கருதுகின்றனர்.

அங்கே உண்மையிலேயே தேர்தலின் பின்னணியில் வேறு என்ன நடந்தன என்று தெரியாது, ஆனால் நாம் இந்தியாவில் அடிக்கடி கூறுகிறோமே சாமான்யர்கள் என்று, அந்த வகுப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறவர்தான் ஹொலாந்த் என்று புரிகிறது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஹிலாரி கிளின்டன் இந்தியா வந்து சென்றிருக்கிறார். அவருடைய பதவிக்காலத்தின் கடைசிப் பயணமாக மட்டும் இதை நாம் கருதிவிட முடியாது. நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் வெற்றி பெறுவார், அவருடைய ஜனநாயகக் கட்சியும் நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெறும் என்று கருதுகிறேன்.

தேர்தல்கள் பெரும்பாலும் உள்ளூர் பிரச்னைகளால்தான் வெல்லப்படுகின்றன அல்லது தோல்வியைத் தழுவுகின்றன. உலக விவகாரங்கள் தேர்தலைப் பாதிப்பதே இல்லை.

அமெரிக்காவில் இப்போது பொருளாதாரம் மீளத் தொடங்கியிருக்கிறது. பிரிட்டனிலும் ஐரோப்பாவிலும் தொழில்துறை மந்தமாக இருக்கும்போதும் அமெரிக்காவில் மீட்சி ஏற்பட்டுவருகிறது. உலக அளவில் காணப்படும் பொருளாதார மந்த நிலையால் சீனா, இந்தியாவில்கூட உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பில் 2% முதல் 3% வரை சரிவு இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தி கடந்த ஆண்டைவிட 6% வளர்ச்சி கண்டாலே நாம் மிகவும் அதிருஷ்டம் செய்தவர்கள் என்று பாராட்டிக் கொள்ளலாம். பொருளாதார நடவடிக்கைகளில் சில திருத்தங்களைச் செய்வது உடனடித் தேவையாகும். இதைச் செய்வதற்கு அரசிடம் எளிதான வழிமுறை ஏதும் இல்லை.

அதிக அளவிலான பெட்ரோலியப் பொருள்களின் இறக்குமதி காரணமாக வெளிவர்த்தகப் பற்றுவரவில் கடுமையான நிதி நெருக்கடி ஏற்படும். நம்முடைய தொழில்துறை உற்பத்தியும் ஏற்றுமதியும் வெகுவாகக் குறைந்திருப்பதால் டாலரின் மதிப்பு உயர்ந்து அதற்கு நிகரான ரூபாயின் மதிப்பு குறையும். அத்துடன் அரசின் வருவாயும் சரிந்து வருவாய்க் கணக்கில் கணிசமான அளவு துண்டுவிழும்.

இந்த நிலையில் பட்ஜெட் பற்றாக்குறையை இட்டு நிரப்புவதும் விலைவாசியைக் கட்டுக்குள் கொண்டுவந்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதும், பெட்ரோலியப் பொருள்களின் விலைவாசிக்கு ஈடுகொடுப்பதும் மிகவும் சிக்கலான வேலை.

குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான வேட்பாளர்கள் குறித்து எந்தப் பெரிய அரசியல் கட்சியிடமும் வேட்பாளர் பட்டியல் என்று ஏதும் இல்லை; காரணம், எந்தக் கட்சிக்கும் அல்லது கூட்டணிக்கும் பெரும்பான்மை வலு இல்லை. எனவே இதைப் பற்றிய பேச்சும் செயல்களும் வெவ்வேறு திருப்பங்களையும் கட்டங்களையும் தாண்டியாக வேண்டும்.

பயங்கரவாத தடுப்பு மையம் (என்.சி.டி.சி.) தொடர்பாக இறுதி முடிவெடுக்க தில்லியில் நடத்தப்பட்ட முதலமைச்சர்கள் மாநாட்டில் கருத்தொற்றுமை ஏற்படவில்லை; அந்த நடவடிக்கை அப்படியே கிடப்பில் போடப்படும் என்று தெரிகிறது.

மாநிலக் கட்சிகள் இதைக் கடுமையாக எதிர்க்கின்றன. இந்த முயற்சி எப்படிப் போகும் என்று யாராலும் ஊகிக்க முடியாது.

குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் அளவிலான வாக்குகள் சமாஜவாதி, அதிமுக, திரிணமூல் காங்கிரஸ், ஐக்கிய ஜனதா தளம், பிஜு ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகளிடமே இருப்பதால் இக் கட்சிகளின் தலைவர்கள் எடுக்கும் முன் முயற்சிகளைப் பொருத்தே எதிர்கால அரசியல் கூட்டணிகளும் உருவாகும்.

பிரணாப் முகர்ஜியை ஏற்கும் மனநிலையில் பல எதிர்க்கட்சிகள் இருக்கின்றன என்றால் அதற்கு அவருடைய அனுபவம், அறிவு, உழைப்பு, ஆற்றல் ஆகியவையே காரணம். காங்கிரஸ் கட்சிக்குள் ""தானாக உருவாக்கிக் கொண்ட தயக்கம்" தலைகாட்டுகிறது. குடியரசுத் தலைவர் வேட்பாளரைத் தேர்வு செய்வதில் முன்னணியில் எப்படிச் செயல்படுவார்களோ, பின்னணியில் பல சதிச் செயல்களை நிச்சயம் அரங்கேற்றுவார்கள். இதில் நிச்சயமற்ற நிலைமை ஏற்படாமல் விரைவில் முடிவெடுப்பது நல்லது என்றே நான் நினைக்கிறேன்.

இப்போது நாட்டின் நிர்வாகிகளில் பலருக்கு மற்றவர்கள் மீது நம்பிக்கை இல்லை; எந்த ஒரு நெருக்கடியையும் சமாளிக்க பிரணாப் முகர்ஜி அவசியம் என்று அரசில் உள்ளோர் கருதுவது - அரசியல் ரீதியாக வேறு மாதிரியாக விளக்கப்பட்டாலும் - உண்மைதான்.

அரசியலில் தான் இழந்த இடத்தைப் பிடிக்க காங்கிரஸ் கட்சிக்கு அவகாசம் தேவை. இந்த நேரத்தில் திறமையான நிதி நிர்வாகம் மிகமிக அவசியம். பிரணாப் முகர்ஜியை விட்டுவிட்டு வேறொருவர் மூலம் அது சாத்தியமாகுமா?

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியால் எளிதாக முடிவெடுத்துவிட முடியாது. சுலபமான வழி, இப்போதுள்ள குடியரசு துணைத் தலைவரையே குடியரசுத் தலைவர் பதவி வேட்பாளராக நியமிப்பதுதான். ஆனால், அந்த நடவடிக்கை இப்போது பலத்த அரசியல் சர்ச்சைக்கு இடம் கொடுத்துவிடும். இதை உடனே சீர்செய்து குடியரசுத் தலைவர், குடியரசு துணைத் தலைவர் பதவிக்கான வேட்பாளர்களை விரைந்து தேர்வு செய்வதுதான் நன்மையைத் தரும்.

இப்போது களத்தில் நிறுத்தப்படலாம் என்று பேசப்படுபவர்கள் அனைவருமே அவரவர் துறையில் இந்த நாட்டுக்காகச் சிறப்பாகச் செயல்பட்டவர்கள்தான். அப்படியிருக்க இந்த விவகாரத்தை இப்படியே நீட்டித்து போர்க்களமாக்குவது எதிர்கால நலனுக்கு நல்லதல்ல.

அரசியல் என்பது யாருக்காகவும் காத்திருப்பதில்லை. ஆந்திர மாநிலத்தின் ராயலசீமை, தெலங்கானா, கடலோரப் பகுதி ஆகிய 3 பிரதேசங்களிலும் அரசியல் சூறாவளி உருவாகி வருகிறது என்று ஏற்கெனவே எச்சரித்தேன். காங்கிரஸ் கட்சி அங்கே தெலுங்கு தேசம், தெலங்கானா ராஷ்டிர சமிதி, ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் என்ற 3 கட்சிகளை எதிர்த்துப் போராட வேண்டும்.

கர்நாடகத்தில் பாரதிய ஜனதா மிகப்பெரிய சிக்கலில் ஆழ்ந்திருக்கிறது. அந்தக் கட்சி எடியூரப்பாவின் பதவி ஆசையால் இரண்டாக உடைந்தால், காங்கிரஸ் கட்சிக்கும் மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கும்தான் ஆதாயம்.

ஜார்க்கண்டில் மிகப்பெரிய அரசியல் குழப்பம் நிலவுகிறது. இதனால் யாருக்காவது ஆதாயம் கிடைக்குமா என்பது சந்தேகம்தான்.

மக்களுடைய கவனம் எல்லாம் இப்போதைக்கு ராஜஸ்தான் மீதும் வசுந்தரா ராஜே சிந்தியா மீதும்தான் இருக்கும். பாரதிய ஜனதாவிலும் இப்படித்தான் நடக்கும் என்று முன்கூட்டியே அரசியல் பார்வையாளர்களுக்குத் தெரியும்.

உத்தரகண்ட் மாநிலத்தில் மிக வலுவான முதலமைச்சரான பி.சி. கந்தூரி அவருடைய பேரவைத் தொகுதியிலேயே உள்ளடி வேலையாலேயே தோற்கடிக்கப்பட்டார். வசுந்தரா ராஜே சிந்தியா கடந்த தேர்தலில் உள்கட்சி சண்டையால்தான் ஆட்சியை இழந்தார். மீண்டும் அதேதான் நடக்கப் போகிறது.

அப்படி நடக்காமல் இருக்க வசுந்தராவுக்கு பாரதிய ஜனதா தலைமை முழு அதிகாரம் வழங்கவேண்டும்.

ஹரியாணா மாநிலத்தில் முதலமைச்சர் பூபிந்தர் சிங் ஹூடா சுதந்திரமாகச் செயல்பட காங்கிரஸ் தலைமை அனுமதிக்க வேண்டும். கட்சிக்குள் ஏராளமான உள்பிரிவுகளை அனுமதித்து அவற்றை ஊக்குவிப்பதால் கட்சிக்குச் செல்வாக்கு சரிவதுடன் தோல்விதான் ஏற்படும்.

காங்கிரஸ் கட்சியிலோ பாரதிய ஜனதாவிலோ மாநிலக் கட்சிக்குள் ஏற்படும் பிரச்னைகளைத் தீர்க்க வழிமுறைகளோ அமைப்போ இல்லை என்பது பெரிய குறை. ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்பதே இல்லை. இதை இப்படியே அனுமதிக்காமல் கட்சிக்குள் ஒருவரை ஒருவர் சந்தித்துப் பேசி கருத்து வேறுபாடுகளைத் தீர்க்க இடம்தர வேண்டும்.

அண்ணா ஹசாரேவும் பாபா ராம்தேவும் தங்களுடைய பொதுக் கூட்டங்களாலும் உண்ணாவிரதங்களாலும் இந்த நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றிவிடுவார்கள் என்று யாராவது கூறினால் எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிகிறது.

நல்லவேளை மக்களாகவே பார்த்து அவர்களுடைய பித்துக்குளித்தனங்களுக்குத் தங்களுடைய எல்லையற்ற ஆதரவு இல்லையென்று காட்டிவிட்டார்கள். அவர்களுடைய கூட்டங்களுக்கும் உண்ணாவிரதங்களுக்கும் கண்மூடித்தனமான ஆதரவை அவர்கள் அளிக்கத் தயாராக இல்லை. அரசியல் தலைவர்களை அவர்கள் வாய்க்கு வந்தபடி விமர்சனம் செய்ததை அவர்கள் ரசிக்கவில்லை. இனி எதிர்காலத்தில் இப்படிச் சிலர் புறப்பட்டு அரசியல் தலைமையை வசைபாடும் நிகழ்ச்சி நடக்கக்கூடாது.

அடுத்த சில மாதங்களைக் கடத்துவது யாருக்குமே எளிதாக இருக்காது; சாமான்ய மனிதன் அரசியல் களத்தில் நடப்பவற்றை உன்னிப்பாகக் கவனித்து வருகிறான். நாட்டின் நிலையைக் கருதி பிரதமர் மன்மோகன் சிங் தன்னுடைய அலுவலகத்துக்கு அன்றாடம் ஸ்கூட்டரில்தான் போக வேண்டும் என்று எதிர்பார்க்கவில்லை, ஆனால், அரசின் செலவுகளிலும் செயல்பாடுகளிலும் சிக்கனம் எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியால் எளிதாக

முடிவெடுத்துவிட முடியாது. சுலபமான வழி, இப்போதுள்ள

குடியரசு துணைத் தலைவரையே குடியரசுத் தலைவர் பதவி வேட்பாளராக நியமிப்பதுதான். ஆனால், அந்த நடவடிக்கை இப்போது பலத்த அரசியல் சர்ச்சைக்கு இடம் கொடுத்துவிடும்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**கால்நடை சிகிச்சை முகாம்**

பதிவு செய்த நாள் : மே 13,2012,23:04 IST

சின்னாளபட்டி:ஆலமரத்துப்பட்டியில் கால்நடை சிகிச்சை முகாம் நடந்தது.ஊராட்சி தலைவர் ராஜலட்சுமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஆறுமுகம் முன்னிலைவகித்தார். கலெக்டர் வெங்கடாசலம் துவக்கி வைத்தார். அரசு வழங்கிய இலவச ஆடுகளுக்கு குடற்புழு நீக்க தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை மண்டல இணை இயக்குனர் சுப்பையன், துணை இயக்குனர் முத்துகோபாலகிருஷ்ணன், டாக்டர் ஜெயபாரதி, ஆய்வாளர் குருவம்மாள், ஊராட்சி ஒன்றிய தலைவர் கோபி, அ.தி. மு.க.,பொதுக்குழு உறுப்பினர் கண்ணன், மாணவரணி பொருளாளர் சந்தானகிருஷ்ணன் பங்கேற்றனர்.

---

தினகரன்

**பருவ காற்றால் சேதம் வாழை இலைக்கு கடும் கிராக்கி**

பதிவு செய்த நேரம்:2012-05-13 08:12:39

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் பகுதியில் வாழையிலைக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆற்றுப்படுகைகள், வீராணம் ஏரி கரையோரம், வெற்றிலை கொடிக்கால்களில் வாழையை சாகுபடி செய்கின்றனர். இந்த ஆண்டு தானே புயல் வீசியதால் வாழை மரங்கள் அடியோடு சாய்ந்தன. இதனால் வாழை சாகுபடி முற்றிலும் தடைபட்டது. புயல் பாதிப்பில்

இருந்து மீண்ட மரங்கள் நன்றாக வளர்ந்து வந்தன. இதனால் சில மாதங்களாக இலை தட்டுப்பாடு நீங்கி இருந்தது. ஹோட்டல்களில் இலை பயன்பாடு அதிகமாக இருந்தது. விலையும் குறைந்தன. விஷேசங்களுக்கு குறைந்த விலையில் இலை களை வாங்கி சென்றனர்.

இந்நிலையில் ஆடி மாதத்தில் வீச வேண்டிய காற்று சித்திரை மாதத்திலேயே ஆரம்பித்துள்ளதால் மரத்தில் உள்ள இலைகள் கிழிந்து சேதமடைந்துள்ளது. பகலில் கடும் வெயில் அடித்தாலும் மாலை நேரத்தில் காற்று வீச தொடங்குகிறது. இதனால் வாழை இலைகள் சேதம் அடைந்து இலைக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த பகுதியில் உள்ளவர்களுக்கு தேவை யான வாழை இலைகள் இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டு வினியோகம் செய்யப்பட்டது. தற்போது வெளியூர்களில் இருந்து இலைகள் இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால் கடும் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது. வரும் மாதத்தில் பல்வேறு விஷேசங்கள் நடைபெறும் என்பதால் இலையின் விலை மேலும் உயரும் என்று கூறப்படுகிறது.

### எலிகளை ஒழிக்க வேளாண் துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை

பதிவு செய்த நேரம்:2012-05-13 08:11:05

காட்டுமன்னார்கோவில்: காட்டுமன்னார்கோவில் பகுதியில் சாகுபடி தொடங்குவதற்கு முன்னர் எலிகள் ஒழிப்பு பணியை வேளாண்மை துறை மூலம் தொடங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாத இறுதியிலோ அல்லது ஜூலை மாத தொடக்கத்திலோ விவசாய பணிகள் தொடங்கும். மேட்டூர் அணை திறந்ததும் விவசாய பணிகள் தொடங்கி விடும். இப்பகுதியில் நெற்பயிர் சாகுபடியே அதிகம் செய்கின்றனர். குறுவை சாகுபடியின் போது கடந்த ஆண்டு எலிகளால் விவசாயிகளுக்கு பெரிதும் நஷ்டம் ஏற்பட்டது. எலி பிடிப்பவர்களை கொண்டு தினந்தோறும் நாள் சம்பளத்திற்கு ஆட்களை வைத்து பிடித்து வந்தனர். மேலும் இரவு நேரங்களில் எலிகளின் தொல்லைகளில் இருந்து பயிரை காப்பாற்ற மின்சார வேலி அமைத்தனர். இதனால் இரவு நேரங்களில் கிராமங்கள் மின் விளக்குகளில் ஜொலித்து காணப்பட்டது. எலிகளின் எண்ணிக்கையும் சற்று குறைந்தது. தற்போது விவசாய பணிகள் முற்றிலும் இல்லாத நிலை யில் வேளாண்மை துறை சார்பில் அந்தந்த பகுதிகளில் எலிகளை அழிப்பதற்கு முயற்சி மேற்கொள்ள வேண் டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

### வரத்து குறைவால் பசுந்தேயிலை விலை உயர்வு

பதிவு செய்த நேரம்:2012-05-13 09:38:16

குன்னூர்: மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலை தூள் அரசு மற்றும் தனியார் ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஏல மையங்களில் தேயிலை தூள்

விற்பனைக்கு ஏற்ப பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. இந்தாண்டு உறைபனி, கடும் வெயில், மழையின்மை போன்ற காரணங்களால் தேயிலை உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏல மையங்களிலும் தேயிலை தூள் தன் குறைந்தது. போதிய தேயிலை தூள் கிடைக்காததால் உள்நாடு, வெளிநாட்டு வர்த்தகர்கள் தேயிலை தூளை போட்டி போட்டு கொண்டு கொள்முதல் செய்கின்றனர். இந்தாண்டு நடைபெற்ற ஏலங்களில் கடந்த 9ம் தேதி அரசு கூட்டுறவு ஏல மையத்தில் நூறு சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. விலையும் கிலோவுக்கு ரூ.5 வரை விலை உயர்ந்தது. தனியார் தேயிலை ஏல மையத்திலும் தேயிலை தூளின் விலை அதிகரித்து பசுந்தேயிலை விலையும் உயர்ந்தது. இந்த வார விலையாக சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ரூ.14, நடுத்தரத்திற்கு ரூ.18, உயர் தரம் ரூ.24 என விலை நிர்ணயிக்கப்பட்டது.

### புதுவையில் மாம்பழம் சீசன் களைகட்டியது

பதிவு செய்த நேரம்:2012-05-13 08:22:01

புதுச்சேரி: முக்கனிகளில் முதன்மையான கனி மாம்பழம். மாம்பழம் தெய்வீக கனி யாக கருதப்படுகிறது. புராணக்கதைகளில் அதன் மகத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளது. மாம்பழகத்தின் தாயகம் இந்தியா. வட இந்தியாவை விட தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ்நாடு, ஆந்திரா மாநிலங்களில் மாம்பழ விளைச் சல் அதிகம். தமிழ்நாட்டில் சேலம், திருச்சி, திருப்பத்தூர், தேனி, திண்டுக்கல், தூத்துக்குடி, மதுரை, பொள்ளாச்சியில் மாம்பழ சாகுபடி பெயர் பெற்றுள் ளது. மே மாதம் மாம்பழ சீசன் தொடங்கி ஆகஸ்டு வரை நீடிக்கும். இந்த ஆண்டு வழக்கம் போல மாம்பழ சீசன் தொடங்கியுள்ளது. புது வைக்கு சேலம், ஆந்திரா, பெங்களூர், சென்னை மற்றும் தென்மாவட்டங்களில் இருந்து பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. சுவைமிகு பங்கனபள்ளி, மல்கோவா, ருமேனியா, இமாம்பசந், பீத்தர், காதர், செந்தூரா மற்றும் இவற்றோடு ஒட்டு, நீலம், நாட்டு பழங்களும் விற்பனையில் உள்ளன. கிலோ 30 முதல் ரூ 100 வரை விற்கப்படுகிறது. மாம்பழங்கள் அதிக அளவில் கடை வீதிகளில் குவிந்துள்ளதால் மாம்பழ வாசனை அனைவரையும் சுண்டி இழுக்கிறது.